நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்

**மன்ற கூட்ட அறிவிப்பு**

திருவத்திபுரம் நகரமன்றத்தின் அவசர மன்ற கூட்டம் 27.08.2021 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்
திருவத்திபுரம் நகராட்சி

27/8/21

பொருள் எண் : 1

இந்நகராட்சியின் அலுவலக முன்புற கடை குத்தகைதாரர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு எண் W.A No of 2018 க்கு தீர்ப்புரை பெற்று வழங்கிமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ 15,000– வழங்கக்கோரி திரு.எம.ஏழுமலை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேற்படி தொகையை வழங்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :
மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 3408/2016/அ1

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் புதியதாக சுமார் 3000 கிலோ சப்ளை செய்திட 16.08.2021ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது முறையே

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | 1 கிலோ விலை |
|---|---|---|
| 1. | பவளம் மகளிர் சுய உதவிக் குழு, செய்யார். | ரூ.14.00/- |
| 2. | சேகர் எலக்ட்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ் நெ.119/18–C காந்தி சாலை, செய்யார். | ரூ.15.00/- |
| 3. | வேலவன் & கோ, நெ.15/2, காந்தி சாலை, செய்யார். | ரூ.16.90/- |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.1ல் உள்ள பவளம் மகளிர் சுய உதவிக்குழு செய்யார் அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 722/2020/எச்1



(386) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(387) மன்ற அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் : 3

திருவத்திபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய கணினி உதவி திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள் கடிதம் முலம் கணினி மற்றும் உபகரணங்கள் தேவை என கோரியதை தொடர்ந்து ரு.7.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற கணினி சப்ளை செய்யும் நிறுவனத்தின் முலம் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 438/2021/இ1

பொருள் எண் : 4

திருவத்திபுரம் நகராட்சியில் செய்யாறு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் பரிந்துரைப்படி வார்டு எண் 15 டி.எம்.ஆதிகேசவன் தெருவில் குடிநீர் விநியோகம் சரியில்லை எனவும் அதனை உடனடியாக சரிசெய்யவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வார்டு எண் 15 டி.எம்.ஆதிகேசவன் தெருவில் உள்ள பழைய பைப்லைன் 30 வருடங்களுக்கு மேலாகி பைப் முழுவதுமாக அடைப்பு ஏற்பட்டுள்ளதால் புதியதாக குடிநீர் குழாய் பைப்லைன் அமைக்கும் பணிக்கு ரு.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1037/2021/இ1

பொருள் எண் : 5

திருவத்திபுரம் நகராட்சியில் செய்யாறு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் பரிந்துரைப்படி வார்டு எண் 1 பாண்டியன் தெரு விரிவு பகுதி பைபாஸ் சாலையில் உள்ள தெருகளுக்கு குடிநீர் விநியோகம் சரிவர கிடைக்கவில்லை எனவும் அதனை உடனடியாக சரிசெய்யவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வார்டு எண் 1 பாண்டியன் தெரு விரிவு பகுதி பைபாஸ் சாலை தெருவில் உள்ள பழைய பைப்லைன் முழுவதுமாக அடைப்பு ஏற்பட்டுள்ளதால் புதியதாக குடிநீர் குழாய் பைப்லைன் அமைக்கும் பணிக்கு ரு.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.



(388) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(389) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1037/2021/இ1

பொருள் எண் : 6

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 சமாதியான் குளத் தெருவில் மழைநீர் செல்ல வடிகால்வாய் வசதி இல்லாததால் புதியதாக மழைநீர் வடிகால்வாய் வசதி ஏற்படுத்தவும் மற்றும் மற்றும் வார்டு எண் 22 ஈ.வெ.ரா பெரியார் தெருவில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாய்களை சீரமைக்கவும் மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

பொருள் எண் : 7

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 புதுத் தெரு 2வது மற்றும் 3வது குறுக்கு தெருக்களில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்களை சீரமைக்க மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

பொருள் எண் : 8

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 தர்மராஜா கோயில் தெருவில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாய்கள் சீரமைக்கவும் மற்றும் ஆற்றங்கரை தெரு பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் வசதி ஏற்படுத்த மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும்



(390) மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது.

(391) மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது.

(392) மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

**பொருள் எண் : 9**

திருவத்திபுரம் நகராட்சி அலுவலக வளாக கட்டிடத்தில் தமிழ் வாழ்க பெயர் பலகை டிஜிட்டல் முறையில் வைக்க மதிப்பீடு ரூ.51000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

**பொருள் எண் : 10**

திருவத்திபுரம் நகராட்சி அலுவலக வளாக கட்டிடத்தில் தமிழ் வாழ்க பெயர் பலகை டிஜிட்டல் முறையில் வைக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. விவரம்

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | துரை டிஜிட்டல், செய்யாறு | ரூ.51000.00 |
| 2. | ஓம் Creation, ஆரணி | ரூ.52500.00 |
| 3. | சிவா டிஜிட்டல், காஞ்சிபுரம் | ரூ.55500.00 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள துரை டிஜிட்டல், செய்யாறு நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள BOV வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட 29.08.2021ஆம் தேதியில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| Item No. | Qty | | Description of works | Contractor The N.A Dt Small Industries Service Industrial Co. Op. Society LTD IND Vellore | | Contractor MUKIL ENTERPRSES Vellore | | Contractor WEPCO Vellore | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | 5 00 | Nos | Repair the BOV Vechicle and supply and fixing of Parts like Doom Set, Meter Set, ON & OFF Keys Set, Handle, Fork Set, Convector Wiring Unit, Cone Set, MCB Switch, Charges, Socket Handle Brake, Contoller Motor, Accelator, Cut Bush Set, Seat, Beak Rod, Horn Switch Indicator Light Set, Indicator Flasher, Horn, Motor Bold, Mud Gaurd, Front Break Hub with Wire U Clamp Charges Oil Grease Drum Stud Bold, Reverse Horn, Pedal Spring and Break Spring and Break Spring, Hand Brack Wire Battery and Sheet Welding Water Service Labour Chages etc all Complete including GST 18% | 86245.00 | 431225.00 | 89812.00 | 449060.00 | 90707.00 | 453535.00 |
| | | | | Sub Total | 431225.00 | | 449060.00 | | 453535.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் உள்ள The N.A Dt Small Industries Service Industrial Co. Op. Society LTD IND Vellore அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

(ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 255/2019/எச்1

(393) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(394) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(395) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(396) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 12**

இந்நகரின் எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியினை தினந்தோறும் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் துணை இயக்குநர் நலப்பணிகள், செய்யார் அவர்களின் ந.க. எண்.2833/இ5/2013 நாள்: 16.06.2020-ன்படியாக அவர்களின் தகவலின்படியாக இந்நகராட்சிக்கு அளவுகோல் 40 நபர்களை பணியில் அமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படியாக மாதத்திற்கு தேவையான பணியாளர்களை டெங்க ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தி வருகிறது. மேலும் தற்போது கொரோனா தொற்று அதிகம் பரவுவதால், இப்பணியினை தொடர்ந்து பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதே கருத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களும் தகவல் தெரிவிக்கப்பட்டதால் இப்பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களில் ந.க.எண்.F3/17888/2018 நாள்: .07.2019-ன்படியான தினக்கூலி அடிப்படையிலான ஊதிய விகித அட்டவணை 12ல் தெரிவித்துள்ள விவரப்படியான ரூ.460/- என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கிடவும், இதன்படியாக தேவையின் அடிப்படையில் சுமார் 40 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.5.52,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் மட்டும்) (40x460=18400x30= 552000) என்ற ஊதிய விகிதத்தில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளவும், இப்பணியினை மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் ஓர் ஆண்டு மேற்கொள்ளவும் இவைக்கான செலவினத் தொகையாக ஆண்டுக்கு ரூ.66.24 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணியினை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண் 2977/2016/எச்1

**பொருள் எண் : 13**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட காந்தி சாலை இராஜாஜி பூங்கா முன்புறம் சாலையோர ஆக்கிரமிப்புகள் அதிகரிப்பதால் ஆக்கிரமிப்புகளை தவிர்க்கும் பொருட்டு பூங்கா பகுதி சுற்றிலும் கம்பி வேலி அமைத்தல் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1046/2021/இ1

**பொருள் எண் : 14**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள 20 BOV வாகனங்களில் பழுது ஏற்பட்டுள்ளதால், முதற்கட்டமாக 5 வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.4.50.000/-க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி BOV வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 255/2019/எச்1

தனி அலுவலர்
திருவத்திபுரம் நகராட்சி

27/8/2021



(397) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(398) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(399) மன்ற ஒப்புதல் வழங்கப்படுகிறது.